(இ) அந்தப் பணத்தை அந்த மாவட்டத்திற்கு மட்டும் செலவு செய்யும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) ரூ. 1,10,000.

(இ) இல்லே.

மனுநீதி நாள்

*** 315 வினு—திரு. எம். முத்தையா :** மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) "மனுநீதி நாள்" திட்டத்தின் அடிப்படையில் நெல்லே மாவட்டத்தில் எத்தனே கிராமங்களில் 1—1—1970 முதல் 1—6—1971 வரை மனுநீதி விசாரணே நடத்தப்பட்டுள்ளது ?

(இ) மனுநீதி விசாரணேக்கு வந்த மகஜர்கள் எத்தனே ?

(உ) மனுநீதி நாள் திட்டத்தின் மூலம் பயனடைந்தவர்கள் எத்தனே பேர் ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) மனுநீதி திட்ட அடிப்படையில் 1—1—1970 முதல் 1—6—1971 வரை நெல்லே மாவட்டத்தில் 1,273 கிராமங்களில் விசாரணே நடத்தப்பட்டுள்ளது.

(இ) 23,844 மனுக்கள் மனுநீதி விசாரணேக்கு வந்தன.

(உ) இத்திட்டத்தின் மூலம் 7,340 பேர் பயனடைந்தனர்.

திரு. எம். முத்தையா : தலேவரவர்களே, இந்த மனுநீதி திட்டத்தின் காரணமாக அநேகமாக கிராம மக்கள் பயன் பெறுகிருர்கள். ஆகவே, இந்த மனுநீதித் திட்டத்தை தீவிரப் படுத்தி, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு தனி அதிகாரியை நியமிக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மனுநீதித் திட்டம் நிரந்தரமாக வைப்பது என்பது இல்லே. ஆங்காங்கு அதிகாரிகள் சென்று மக்களுடைய குறைகளே விசாரித்து நடவடிக்கை எடுத்து வருகிருர்கள். ஒவ்வொரு கிராமம் கிராமமாகச் சென்று இப்படிச் செய்து வருகிருர்கள். எல்லா கிராமங்களிலும் இப்படி செய்து முடித்த பின்னர், மறுபடியும் எல்லாக் கிராமங்களுக்கும் ஒரு முறை வருவார்கள்.

Eviction of peasants in Saptur.

* 316. Q.—THIRU K. T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state :

(*a*) whether representations have been received from **Saptur** in Tirumangalam taluk, Madurai district about illegal orders by Tahsildar in regard to the eviction of authorised peasants in support of **Zamindar;**

1971 டிசம்பர் 13]

(b) whether it is a fact that a protest meeting was held in the village on 23rd September 1971; and

(c) the steps taken to quieten the unrest?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) அவ்வித முறையீடு வரவில்லை.

(இ) இல்லை. கம்யூனிஸ்ட் (வலதுசாரி) கட்சியின் சாதாரணக் கூட்டம் ஒன்று 23—9—1971-ல் நடைபெற்றது.

(உ) இவ்வினவிற்கு இடமில்லை.

THIRU K. T. K. THANGAMANI : I want to make some correction in the question. Clause (c) says ' steps taken to quicken the unrest '. What I wanted to say was to ' quieten ' the unrest.

சார், இந்தத் திருமங்கலம் தாலுக்காவில் இருக்கிற ஜமீன்தார்கள், ஜமீன்தார் ஒழிப்புச் சட்டத்திற்குப் பிறகும், தங்களுக்குச் சொந்தமான பண்ணை நிலம் என்று ஏராளமான நிலங்களை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். வேறு யாருக்கும் தண்ணீர் விடாமல் ஏரி தண்ணீர் முழுவதையும் அவர்களே உபயோகித்து வருகிறார்கள்.

MR. SPEAKER : May I know whether it has been wrongly printed or the hon. Member has drafted it wrongly?

திரு. கே. டி. கே. தங்கமணி : இப்படி வைத்துக்கொண்டிருப்பது மாத்திரமல்லாமல் அந்த விவசாயிகளையும் பல விதமான இன்னல்களுக்கு ஆட்படுத்துகிறார்கள். அவர்களை பல விதத்திலும் கோர்ட்டுக்கு கொண்டு செல்கிறார்கள். கம்யூனிஸ்ட் கட்சி தொழிற் சங்கத்தில் இருக்கிற தொழிலாளர்களும் இருக்கிறார்கள். ஆகவே தான் நான் கம்யூனிஸ்ட் கட்சி பொதுக்கூட்டத்தில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அனுப்பப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன் என்று கேட்டேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அன்று நடந்த கூட்டத்தில் சாதாரணமாக பல அரசியல் விவகாரங்களைப்பற்றி பேசப் பட்டதாகத்தான் அரசாங்கத்திற்கு தகவல் வந்திருக்கிறது. அங்கத்தினர் சொன்ன குற்றச்சாட்டுகள் எழுதி அனுப்பப் படுமானால், அதைப்பற்றி அரசு பரிசீலிக்கும்.

MR. SPEAKER : So ' quieten ' has become ' quicken '.

பந்தலூரிலுள்ள ஆதிவாசிகளுக்கு நிலங்கள்

* 317 வின—திரு. கு. அ. பொம்மன் : மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினக் களுக்கு விடையளிப்பாரா—